



# மதிப்பளிப்பு விழா மலர்

## 22-09-2013

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாழ்வது ஒருமுறை
வாழ்த்தட்டும் தலைமுறை



திரு. சுப்பிரமணியம் இராசரத்தினம் அவர்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

House of Commons

26 August 2013



**Rathika Sitsabaiesan**
Member of Parliament for Scarborough-Rouge River

**A Personal Message from MP Rathika Sitsabaiesan**

Vanakkam,

I am thrilled to learn that Tamil Canadian community elders have come together to congratulate and celebrate Mr. S. Rajaratnam for a life dedicated to the Tamil Canadian community. Mr. Rajaratnam's unrelenting efforts to better the life of his fellow Canadians, his sense of social justice, and his leadership role in many community initiatives deserve to be celebrated so that they can be emulated by young Canadians.

I am one among the many Canadian youth of Tamil heritage who benefitted from the pioneering work tirelessly undertaken by Mr. Rajaratnam throughout the years.

I first came to know him as a family friend. However, I soon found myself learning Bharatha natyam, the classical dance of my ancestors, and Tamil, the language of my ancestors, at the Academy of Tamil Arts and Technology, an institution founded and run by him with the help of a group of dedicated volunteers.

The 'Academy', as we students liked to refer to it, was instrumental in ensuring that hundreds of young Canadians of Tamil heritage were able to stay connected to our roots. The Academy instilled in its students a sense of social responsibility, a sense of duty to fellow human beings, and a sense of pride for our identity.

The many opportunities we were granted to perform in public and do volunteer work further honed our leadership skills and encouraged us to dream of changing the world for the

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

better one step at a time.

The many achievements of Mr. Rajaratnam are a testament to Canada's multiculturalism at work. For, he did not achieve what he achieved in a vacuum. Rather, he achieved it by rallying like-minded people around him, by reaching across communities and collaborating with other Canadian communities for mutual benefit, and by convincing the unconvinced that a benefit for the community is a benefit for every individual within that community.

He is a leader who dreamed big and had the courage of his conviction to make others believe dreams.

As someone who has personally benefitted from his selfless work, I thank him for everything he has done to benefit the lives of Canadians in general and Tamil Canadians in particular.

While I congratulate him on his past achievements, I am encouraged to see him continue his work with the same vigor and sense of urgency as when he started.

Though we have come a long way, we cannot yet rest on our laurels, for we have much to do before we can rest. Robert Frost spoke for us all when he said:

> "The woods are lovely, dark and deep,
> But I have promises to keep,
> And miles to go before I sleep,
> And miles to go before I sleep"

Sincerely,

R Sitsabaiesan MP

Rathika Sitsabaiesan, MP

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இராசராச சோழன்போல
# என்றும் வாழ்கவே!

சொல்லவெண்ணா நற்குணங்கள் தோன்ற நிற்பவர்
கல்விகலை மாணவர்கள் கற்க வைப்பவர்
கல்லைத்தானும் கரும்புபோன்று கனியச் செய்பவர்
எல்லையில்லா ஆற்றல்மிக்க இராச ரத்தினம்!

முந்திவந்து கனடாநாட்டில் முதன்மை யாகவே
சொந்தநாட்டின் துயரம்போகத் துணிந்து தொண்டுகள்
சிந்தைசெய்து சிறந்தநன்மை சேரும் வகையிலே
எந்தநாளும் செய்யுமெங்கள் இராச ரத்தினம்!

தமிழீழத்துச் சங்கம்மூலம் தமிழர் ஒற்றுமை
தமிழுரிமை பெருமையாவும் தழைக்கச் செய்பவர்
தமிழர்பண்பைத் தன்மானத்தைத் தனது கண்களின்
இமையைப்போலக் காத்துநிற்கும் இராச ரத்தினம்!

பங்கமின்றிப் புகுந்தநாட்டில் பரந்து தமிழீழச்
சங்கமோங்க அரசைநாடித் தகுந்த நன்கொடை
நன்குபெற்றுச் சொந்தக்கட்டி டத்தில் நற்றமிழ்
இங்குதங்க வழிகள்செய்த இராச ரத்தினம்!

தமிழையிந்த நாட்டிற்கற்கத் தளம் அமைத்தவர்
அமையும்பாட நூல்கள்தம்மை ஆக்கு வித்தவர்
குமுதம்போல இரவில்விழித்தும் கொண்ட கருமத்தை
இமைக்குமுன்னர் செய்துமுடிக்கும் இராச ரத்தினம்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாற்றமற்ற பேச்சுவன்மை வாய்க்கப் பெற்றவர்
ஏற்றகருத்து நூல்களெண்ணி எழுத வல்லவர்
கூற்றுநெஞ்சர் குறுக்கிட்டாலும் கொண்ட உறுதியால்
ஈற்றில்தக்க வெற்றியீட்டும் இராச ரத்தினம்!

இந்தக்காலம் ஏபிசியை இயக்கி வருபவர்
சொந்தமூளை சோர்ந்திடாது துரித கதியிலே
பந்திக்கணக்கும் செய்யத்தக்க பயிற்சி அளிப்பவர்
எந்தக்காலும் இளைஞன்போன்ற இராச ரதத்தினம்!

புத்திக்கூர்மை மிக்கநல்ல பொன்ம னத்தனை
சித்தர்போல சிந்திக்கின்ற ஒழுக்க சீலனை
நத்திநண்பர் சேர்ந்துவாழ்த்தும் நல்ல நாளிலே
முத்துப்போல வாழ்கவென்று முந்தி வாழ்த்துவேன்!

இராசநண்ப ஆற்றல்மனைவி என்றும் வாழ்த்தவே
பராவிமக்கள் பத்தியோடு பக்கம் சூழவே
தராசுபோலத் தருமம்பேணும் தமிழும் வாழ்த்தவே
இராசராச சோழன்போல என்றும் வாழ்கவே!

(ஏபிசி – ABC – Active Brain Centre: நத்தி – விரும்பி)

**கவிநாயகர் வி. கந்தவனம்**

கனடா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
Uthayan Publications
Canada's #1 Tamil Newspaper

## திரு. சுப்பிரமணியம் இராசரத்தினம் அவர்கள்,

அன்புடையீர்!

தங்களது தமிழ்ப் பணியையும் சமூகப் பணியையும் பாராட்டி இங்குள்ள நண்பர்கள் ஒரு பாராட்டு விழாவை நடத்தவுள்ளதை அறிந்து மகிழ்ச்சியடைந்தோம்.

இவ்வாறான ஒரு பாராட்டு விழாவில் தாங்கள் பெருமைக்குரியவராக கௌரவிக்கப்படுவதற்கு மிகவும் ஏற்புடையவர் என்பதை நாம் மட்டுமல்ல, கனடாவில் வாழும் அனைத்து தமிழ் மக்களும் நன்கு அறிவார்கள். மேலும், தங்களது அனைத்துப் பணிகளையும் அதன் பலாபலன்களையும் நமது கனடிய தமிழர் சமூகம் நன்கு அவதானித்தும் அனுபவித்தும் வருகின்றது என்பதையும் நாம் நன்கு அறிவோம்.

தங்களது சேவைகளுக்கு பக்கபலமாக இருப்பது தங்களிடம் காணப்படும் தலைமைத்துவப் பண்பு என்பதை நாம் நன்கு உணர்ந்து கொண்ட காரணத்தால்தான், சில வருடங்களுக்கு முன்னர் நமது "உதயன் சர்வதேச விருது விழா" வில் தலைமைத்துவ விருதினை வழங்கி கௌரவித்தோம். எனவே இன்று நடைபெறும் தங்களைப் பாராட்டும் விழாவில் நாம் கலந்து கொண்டு, தங்கள் பெருமைகளை பகிர்ந்து கொள்ளும் இனிய நாளாக எண்ணி மகிழ்கின்றோம்.

எமது வாழ்த்துக்களும் நன்றியும் என்றும் தங்களுக்காக.

இங்ஙனம்,

**ஆர்.என். லோகேந்திரலிங்கம்**
பிரதம ஆசிரியர் – கனடா உதயன்,
நிறுவனர் – "உதயன் சர்வதேச விருது விழா"
22-09-2013

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சவால்களை விரும்பியேற்றுச் சாதனையாக்குபவர்

துல்லியமான தெளிவு, எடுத்த விடயத்தில் முற்றுமுழுதான ஈடுபாடு, எதிர்காலம் குறித்த துல்லியப் பார்வை, தான் பொறுப்பேற்றுக் கொண்ட விடயங்களில் முழுதான வெற்றி, ஒளிவு மறைவில்லாக் கருத்துப் பகிர்வு, அசாதாரண துணிச்சல் இவற்றிற்கு உதாரண நாயகனாக யாரை சமகாலத்தில் குறிப்பிடலாம் என்றால் உங்களின் கைகள் திரு.சுப்பிரமணியம் இராசரத்தினம் அவர்களையே சுட்டிக்காட்டும்.

எதிராளிகள் அதிகமுள்ளவர் என்ற கோதாவில் எனக்கு அறிமுகமான இராசரத்தினம் அண்ணா அவர்களிடம் எல்லாவற்றிலும் எனக்குப் பிடித்த குணம் யாதெனில், அது இன்றுவரை அவரது எதிராளிகளைக் கூட அவரிடமிருந்து பிரிந்து செல்லாமால் வைத்திருக்கும் அந்த "கோபத்திலும் கலந்திருக்கும் அன்பு" தான்.

தான் நாளாந்தம் செய்ய வேண்டியவற்றை ஒரு காகிதத்தில் குறித்து வைத்து அவற்றை அன்றைய தினம் முடிவதற்குள் செய்து முடிக்கும் இவரது திறனே இவரை ஆளுமையுள்ள ஒரு மனிதராக்கியது. அந்த ஆளுமையை கூராக்கி, உருப்பேற்றி, வழி சமைத்து இவர் தான் எடுத்த எந்தவிடயத்திலும் 100 விழுக்காடு பங்களிப்போடு விருப்புவந்து செயலாற்றுவதற்கு வழிகோலியவர் இவருக்குக் கிடைத்த இல்லாள் பவானி இராசரத்தினம் அவர்களேயாகும்.

வீட்டில் என்ன நடக்கிறது என்பது குறித்த எந்த சிந்தனையுமின்றிச் செயலாற்றும் ஒரு மனிதராகவே இராஜரத்தினத்தைப் பலருக்கும் தெரியும். அப்படியான அவரது பணிக்காக தன்னை முழுமையாக வீடு சார்ந்த அனைத்துப் பணிகளிலும் அர்ப்பணித்து அவருடைய வெற்றிக்காக உழைத்த திருமதி பவானி இராசரத்தினம் அவர்களின் பங்கு இந்த வெற்றியாளனிற்கு ஒரு இமயாலத் துணிவை, அசட்டுத் தைரியத்தைக் கூடக் கொடுத்திருந்தது.

இவரின் கடந்தகால வாழ்க்கையில் மைல்கல் என என்னால் இரண்டு விடயங்களை குறிப்பிட்டுக் கூறமுடியும். முதலாவது இவரால் கனடாவில் வெளியிடப்பட்ட வரலாற்றுத் தொகுப்பு நூலான "தமிழீழம் நாடும் அரசும்". இந்த நூலிற்கான வடிவமைப்புப் பணிகளில் சம்பந்தப்பட்டவன் என்ற முறையில் அவர் இந்த நூலை வெளிக் கொண்டுவருவதில் சந்தித்த சவால்களை கண்டவன்.

அந்த நூலை வெளியிட்டதன் பயனை இன்று தமிழ் கூறும் நல்லுலகம் அனுபவிக்கிறது. அது இன்று தமிழர் வாழும் நாடுகளிலெல்லாம் தமிழர் வரலாற்றுக் கற்கைக்கு இன்று மட்டுமல்ல, காலாகாலத்திற்கும் உதவிக் கொண்டேயிருக்கும்.

இவற்றைப் போல பல பல நன்முயற்சிகளின் பின்னால் திரு. இராசரத்தினம் அவர்களின் உழைப்பைக் கனடியத் தமிழர்களின் வரலாறு பதிவு செய்யும்.

**சுரேஸ் தர்மா**
கனடா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இனத்துக்காக வாழ்பவர் அண்ணர் இராசரத்தினம்!

என் அன்பிற்குரிய அண்ணர் இராசரத்தினம் அவர்களுக்குப் பாராட்டு விழா! அவர் பாராட்டுக்குரியவர்! நிச்சயம் பாராட்டப்பட வேண்டியவர்!

"தன் இனத்துக்காக – இனவிடுதலைக்காக – சமூக நலனுக்காக – சமுதாய முன்னேற்றத்துக்காக தன் வாழ்நாளில் உழைத்த மனிதர்களை அவர்கள் வாழ்கின்ற காலத்திலேயே மதித்துப் போற்றுவதில் தான் அந்த இனத்தினதும் தேசத்தினதும் பெருமை தங்கியுள்ளது" என்றார் அமெரிக்க தேசத்தின் முன்னாள் ஜனாதிபதி கெனடி.

தன் வாழ்நாளில் பெரும் பகுதியை தன்னுடைய இனத்திற்காகவும் தனது இனத்தின் கலை பண்பாட்டுக்காகவும் உழைத்தவர் – உழைத்துக் கொண்டிருப்பவர் அண்ணர் இராசரத்தினம் அவர்கள். அவரைக் கடந்த 25 ஆண்டுகளுக்கு மேலாக நான் அறிவேன். அவரோடு முரண்படுகின்றவர்களும் உள்ளன்போடு உடன்படுகின்ற விடயம் அவரது நிர்வாகத் திறமை, எடுக்கின்ற காரியத்தை கனகச்சிதமாக நிறைவேற்றும் தன்மை.

திண்ணிய நெஞ்சோடும் திடங்கொண்ட தோளோடும் புலம்பெயர் தமிழ் மாணவர்களின் கல்வியியல் வரலாற்றில் தனது ஆற்றலையும் அவாவையும் நிலை நிறுத்தியது மட்டுமல்ல, தமிழ்மொழிக் கல்வியின் ஆரோக்கியமான வளர்ச்சிக்கும் வித்திட்டு நின்ற ஒரு கல்விமான் அவர். தான் நம்பிய அரசியல் கொள்கைகளுக்காக, யதார்த்தநிலை உணர்ந்த முற்போக்குக் குணத்துடன் செயலாற்றி வருபவர் அவர். சொந்த மண்ணிலேயே எம் இனம் முகத்தையும் முகவரியையும் தொலைத்துவிட்டுத் திரியப்போகும் இருள் சூழ்ந்த காலம் நெருங்கி வருவதை உணர்ந்து, அதனைத் தடுத்து நிறுத்த வேண்டும் என்ற பேராவல் கொண்ட மனிதர் அவர்.

இந்த விழா இனத்திற்காக உழைப்பவனுக்கு இனத்தின் விழுதுகள் எடுக்கின்ற விழா! தமிழுக்காக உழைத்த தமிழ்க் கடலுக்கு அந்தக் கடலின் மடியில் கிடக்கும் சிப்பிகள் எடுக்கின்ற விழா!

தமிழ்க்கலை, தொழில்நுட்பக் கல்லூரி எனும் மாடத்தில் கொலு வீற்றிருந்தவருக்கு அந்த மாடத்தில் இளைப்பாறிய புறாக்கள் எடுக்கின்ற விழா! இதிலே வஞ்சகப் புகழ்ச்சி இல்லை! வேஷங்கள் இல்லை! அன்பு எண்ணங்களும் பாசமுமே நிறைந்து உள்ளது!

தமிழ்ச் சமுதாயத்தின் நல்வாழ்விலும் தனிப்பட்டவர்கள் வாழ்க்கையிலும் புலம்பெயர் தமிழ்க் கல்விச் சங்கத்தின் மேன்மையிலும் தணியாத தாகம் கொண்டு ஆற்றிடும் பணி கண்டு அண்ணர் இராசரத்தினம் அவர்களுக்கு விழா எடுக்கும் விழாக் குழுவினரையும் அகமும் முகமும் மலர்ந்து வாழ்த்துகின்றேன். வாழ்க! வளர்க!

நன்றியுடன்
**T.K பரமேஸ்வரன்** – ஆசிரியர்
24 ஆகஸ்ட் 2013

ஈழநாடு **EELANADU**
The Tamil Weekly Newspaper

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அச்சாணியாக வாழ்பவர்

2001ம் ஆண்டு ஆடித் திங்கள் 11ஆம் தினத்தன்று ஹொலிவூட்டில் ஒளி வெள்ளத்தில் மூழ்கியிருந்த பிரமாண்டமான வண்ண அரங்கிலே பலத்த ஆரவாரங்களுக்கு மத்தியில், திரைப்படத் துறையில் சாதனை படைத்த சாதனையாளர்களைக் கௌரவிக்கும் விழாவிலே வட அமெரிக்காவில் அத்துறையில் முத்திரை பதித்தவர்களின் ஒன்றுகூடலின் போது வெளிநாட்டில் என்னால் தயாரிக்கப்பட்டு இயக்கப்பட்ட "Beneath the Skin: Untold Story" என்ற ஆங்கிலப்படம் சிறந்த கதை, சிறந்த தயாரிப்பாளர், சிறந்த சிருங்கார ரசத்திற்கான மூன்று விருதுகளைக் கொடுத்து கௌரவித்துக் கொண்டிருக்கும் போது என் மனத்திரையில் அதுகாறும் அன்பு எனும் விளக்கிற்கு நன்றி என்னும் நெய் வார்த்து நட்பு என்னும் திரியிட்டு நான் ஏற்றி வைத்திருந்த ஒளியில் நடுநாயகமாக என் அன்பிற்கும் கௌரவத்திற்கும் பாத்திரமான திரு. இராசரத்தினம் அவர்களின் நினைவு ஒளி எந்தவித சலனமும் இல்லாது கொழுந்து விட்டு எரிந்து கொண்டிருந்தது.

நீண்ட காலமாக என் நன்றி உணர்வுகளை என் மனதில் சுமப்பது சுகமானதேயாயினும் அதைப் பலருடன் இந்த நல்ல சந்தர்ப்பத்தில் பகிர்ந்து கொள்வது உசிதமென கருதுகிறேன்.

இளம் கடலோடியாக வாழ்க்கையை ஆரம்பித்த நான் 1980ஆம் ஆண்டின் பிற்பகுதியில் புலம்பெயர்ந்து கனடா நாட்டின் வெண்பனி மீது கால் பதித்த பொழுது என் இதயத்திற்குள் தேக்கி வைத்திருந்த கலை ஆர்வத்தின் சுமைகளும் ஒன்றாகவே சேர்ந்துத்தான் மிதந்தேன் என்பதுதான் உண்மை.

என் கலையார்வத்தை வண்ணத்திரைகளிலே கொண்டுவர உருவாகும் என் சிந்தனைகளின் உயிர்துடிப்புகளை அதன் கருவிலேயே நாடி பிடித்து பட்டைத் தீட்டித் தந்த ஆளுமை மிக்கவர் திரு. இராசரத்தினம் அவர்கள். இவர் நான் இப்படத்தின் படம் பிடிப்பினை கனடாவில் ஆரம்பித்த போது மனதாலும், பொருளாலும் உதவியதுடன் படப்பிடிப் புக்கான வீடுகள் முதற்கொண்டு பல்வேறு வகைப்பட்ட உதவிகள் எல்லாவற்றையும் தன்னால் இயன்றவரை செய்து நான் மனந்தளர்ந்த போதெல்லாம் உற்சாகம் தந்தவர்.

இன்று போல் அன்று எமக்கென ஒரு தொலைக்காட்சியோ பல வானொலிகளோ, எண்ணற்ற பத்திரிகைகளோ, தனக்கென ஒரு வலையமைப்போ இல்லாத கால கட்டத்தில் எனக்கு அன்னாரை அறிமுகப்படுத்திய என் இனிய நண்பர் நவா அவர்களுக்கே என் முதல் நன்றி.

ஆழ்மனதிலே இனப்பற்றும் மொழிப்பற்றும் மனிதநேயமுமிக்க ஒரு கலைஞர் திரு. இராசரத்தினம் அவர்கள். சீரிய சிந்தனையாளர், சிந்தனைகளுக்கமைவான செயல்வீரர். செயற்பாட்டில் மனிதநேயமும் மனிதநேயத்தின் கருவூலமாக தாயகத்தில் அல்லலுறும் எம் இளைய

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தலைமுறையினருக்கு அவர் செய்துவரும் உதவிகளும் தமிழ் மொழியின்பால் அவர் கொண்டுள்ள நேசத்திற்கு, தமிழர்களின் உயர்வைக் கண்டு மகிழும் தன்மைக்கு என் வாழ்வே ஓர் உதாரணம்.

கனடாவில் படப்பிடிப்புகள் முடிவடைந்ததும் படத்திற்கான இசை, படத்தொகுப்பு (எடிற்றிங்) உள்பட படத்தை நிறைவாக்கும் அத்தனை பணிகளையும் இங்கு செய்வதானால் பெரும் பணம் வேண்டும். எனவே என்னை இந்தியா கொண்டுசெல்லும்படி பணித்து அங்கு மதிப்புக்குரிய கலைப்புலி தானு அவர்களையும் மாணவர் நகலக உரிமையாளர் ந. அருணாசலம் அவர்களையும் அறிமுகப்படுத்தி அங்கேயே நான் தங்க இடமும் பெற்று தந்து மேலும் பொருளாதார உதவியும் செய்து அப்படத்தைக் வெளிக் கொண்டுவர மூலமாக இருந்தவர் திரு. இராசரத்தினம் அவர்கள் என்றால் மிகையாகாது. அவரின் இத்தகைய பற்றுக்கு பண்புக்கு ஆதாரமாக "பண்பாடு வேரும் விழுதும்," "தமிழீழம் நாடும் – அரசும்" என்ற அவரது படைப்புகள் சான்று பகர்கின்றன.

எமது பாரம்பரியப் பண்பாடுகளிலும் கலைகளிலும் அவர் கொண் டிருக்கும் ஈர்ப்பின் காரணமாக இந்தியாவினின்றும் பரத நாட்டியக் கலைஞர்களை வரவழைத்து இங்குள்ள இளைஞர்களினதும் யுவதிகளினதும் திறமைகளை மேம்படுத்தும் அவரது செயற்பாடுகள் யாவும் போற்றுதற்குரியதாகும்.

என் பலதரப்பட்ட தேடல்களில் ஏற்பட்ட ஐயங்களையும் தெளிவு இல்லாத விடயங்களையும் அவ்வப்போது தெளிவுபடுத்தியவர். வெற்றுப் புகழ்ச்சிக்கும் முகஸ்துதிக்காகவும் அல்லாது எல்லா சந்தர்ப்பங்களிலும் வருவோரை உள் அன்புடன் வரவேற்கும் உயரிய பண்பாளர்.

முகத்தான் அமர்ந்து இனிதுநோக்கி
அகத்தானம் இன்சொலினதே அறம் – (குறள்: 93)

என்ற வள்ளுவனின் வாக்கிற்கொப்ப வாழ்க்கையை ஆரம்பித்தவர் போலும். ஆகையினால்தான் அவருக்கு அமைந்த மங்களம் நிறைந்த திருமதியும் அவர்தம் குழந்தைகளும் வள்ளுவனின்

மங்களம் என்ப மனைமாட்சி மற்றும்
அதன் நன்கலம் நன்மக்கட்பேறு – (குறள்:60)

என்ற இன்னுமொரு குறளுக்கொப்ப தங்கள் வாழ்க்கையில் உதாரண புருஷர்களாக வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். நல்லவற்றை நாடின் நல்லவையே வந்துசேரும் என்பதை மெய்ப்படுத்த வந்திருக்கும் மருமக்கள்களும் அத்தகையவர்களே.

அன்னாருக்கு மாத்திரம் அன்றி அவரது முழுக் குடும்பத்தினருக்கும் எனது மனம் நிறைந்த நன்றிகளை தெரிவிப்பதில் பூரிப்படைகிறேன். எல்லாம் வல்லவன் அவர்களுக்கு என்றும் துணை நிற்பானாக!

**- கென். கந்தையா**
கனடா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இராசரத்தினமும் அவர்தம் பணிகளும்!

திரு. இராசரத்தினம் அவர்களை அவர் பக்கத்தில் நின்று பார்க்காமல், இன்னொருபக்கத்தில் நின்று நீண்டகாலமாய் கவனித்துக்கொண்டிருந்தவன் என்றவகையில் ரொறன்ரோ தமிழ்ச் சமூகத்திற்கு அவர் செய்துவரும் பணிகளையும், அவற்றினூடாக அவர் நிகழ்த்திய சாதனைகளையும் –

> இதனை இதனால் இவன்முடிக்கும் என்றாய்ந்து
> அதனை அவன்கண் விடல் – (குறள்: 517)

எனும் குறள் மூலம் நினைவுகூரலாம்.

இன்று தமிழ் எழுத்தாளர்களும் தமிழ்க் கலைஞர்களும் எதிர்கொள்ளும் மிகப் பெரிய "அபாயம்" – "பிழையில்லாத் தமிழ்" அவர்களுக்கு தெரியாமல் இருப்பது.

இது தமிழ் மொழியை ஒழுங்காக, முறைசார்ந்து, தீவிரத்துடன் வாழையடி வாழையாகக் கற்பிக்கும் ஆசிரியப் பரம்பரை குறைந்து வருகின்றமையின் பக்கவிளைவு. இந்த அபாயத்தினை அவதானித்த இராசரத்தினம் அவர்கள் அர்ப்பணிப்புடன் இதனை நிவர்த்திசெய்யப் பாடுபட்டார்.

தமிழ்க் கலைஞர்கள், எழுத்தாளர்களின் பணி, தமிழுக்கு மெருகேற்றுவது, அழகூட்டுவது, ஆழமூட்டுவது, அறிவூட்டுவது. இவையெல்லாம் சித்திரம் வரைவதை ஒத்தவை. சுவர் இருந்தால்தான் சித்திரம் வரையலாம். இங்கு சுவர் என்பது தமிழ் மொழிக் கல்வி, தமிழ் அறிவு, தமிழைத் தாய்மொழியாய் பயன்படுத்துவது, தமிழை இரண்டாவது மொழியாகத் திறம்படப் பயன்படுத்துவது.

இந்தச் சுவரைத் தமிழ்க் கனடாவில் கட்டி எழுப்புபவர்களில் இராசரத்தினம் முக்கியமானவர் – அவர் ஒரு முன்மாதிரி.

ஒரு சஞ்சிகையாளன், ஒரு எழுத்தாளன், ஒரு வாசகன் என்ற முறையில் நான் அவரது பணியைப் பெரிதும் மதிக்கிறேன். எங்களால் செய்யமுடியாத காரியங்கள் அவர் உழைப்பாலும் அர்ப்பணிப்பாலும் இங்கு நடந்தேறுவதைக் கண்கூடாகக் காண்கிறேன்.

அவருக்கு நன்றியும் வணக்கமும் வாழ்த்துக்களும்!

**செல்வம் அருளானந்தம்**

"காலம்" – ஆசிரியர்

KALAM
Tamil Literary Magazine
Ontario Corp. No: 1836150

**Editor & Publisher**
Selvam Arulanantham
tamilbook.com
kalam@tamilbook.com

**Sub Editors**
N.K Mahalingam
Cheliam
Theva Arulanantham

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எமது கலைஞர்கள் உயர்ச்சியில் மகிழ்ச்சி காண்பவர்

திரு. சுப்பிரமணியம் இராசரத்தினம் அவர்கள் பல ஆண்டு காலமாக சமூகத்திற்கு ஆற்றிய, ஆற்றிவரும் சேவையை மதித்து பராட்டி விழா எடுக்கும் இந் நேரத்தில் எனது நடனக் கலைச் சேவையை கனடிய மண்ணில் தடம் பதிக்க வைத்த அந்த எங்களது குடும்ப நண்பரைப் பாராட்டுவதில் நாமும் இணைந்து கொள்வதில் பெருமகிழ்ச்சி அடைகிறோம்.

அதே வேளை அவரைப் பற்றிய எனது பசுமையான நினைவுப் பதிவுகளைப் பகிர்ந்து கொள்வதில் பெருமையும் கொள்கிறேன். கனடிய மண்ணில் தமிழும் தமிழர்களின் பாரம்பரிய நுண்கலைகளும் மணம் பரப்பி இங்குள்ள நமது உறவுகளின் இளைய சந்ததியினர் பயனுறும் வகையில் 1990ஆம் ஆண்டு உருவாக்கப்பட்ட தமிழ் தொழில்நுட்பக் கல்லூரியின் பொறுப்பாளராக அவர் புரிந்த அளப்பரிய சேவைகளை அறியாத தமிழ் சமூகமே இல்லை எனக் கூறலாம்.

குறிப்பாக தாயகத்தை விட்டு கனடாவிற்கு நான் புலம்பெயர்ந் துள்ளதை அறிந்து, எனது நடனக்கலை இந்நாட்டிலும் தொடரவேண்டும் என நல்லாசி தந்து, ஊக்குவித்தது மட்டுமன்றி, தான் பொறுப்பேற்றிருந்த கனடா தமிழ் கலை, தொழில்நுட்பக் கல்லூரியிலும் என்னை இணைத்து ஒரு சிறந்த நடன ஆசிரியை என்ற அந்தஸ்த்தையும் அங்கீகாரத்தையும் பெருமையையும் தேடித் தந்தவர் என்று ஆழ்ந்த நன்றியுடன் கூறக் கடமைப்பட்டுள்ளேன்.

இந்திய நடனக் கலைஞரான கலைமாமணி சகிர் குசேன் அவர்களை கனடாவிற்கு 1999ஆம் ஆண்டு வரவழைத்து ஆறு மாதங்களுக்கு மேல் தன்னோடு வைத்திருந்து, இங்குள்ள ஆசிரியர்களும் மாணவர்களும் அவரோடு தமது அறிவைப் பகிர்ந்து கொள்ள வாய்ப்பளித்திருந்தார்.

கலைமாமணி மதுரை முரளிதரன் அவர்களையும் முதன்முதல் கனடாவிற்கு வரவழைத்து சகோதரி திருமதி. கிருபாநிதி இரத்தினேஸ்வரன் அவர்கள் பொறுப்பில் கனடிய மாணவர் களைக் கொண்டு 'கோவலன் கண்ணகி' நாட்டிய நடனத்தை அரங்கேற்றியதுடன் – இங்குள்ள ஆசிரியர்கள், மாணவர்கள் தமது கருத்துக்களைப் பகிர்ந்து கொள்ளவும் உறவுப் பாலத்தை ஏற்படுத்தி வைத்தவர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதேபோன்று எமது இசைக் கலைஞர்களும் இந்திய இசைக் கலைஞர்களோடு உறவை வளர்த்துக் கொள்ள ரி.எல். மகாராசன், புஸ்பவனம் குப்புசாமி போன்றோரை வரவழைத்திருந்தார்.

இவ்வாறு கனடியக் கலைஞர்களும் தமக்குள் ஒற்றுமையாகவும் ஒன்றிணைந்தும் தமது திறமைகளைப் பகிர்ந்து கொள்ள வேண்டும் என்ற விருப்பு உடையவர், அவர். அந்த எண்ணத்தில் ஒவ்வொரு வருடமும் நாட்டியக் கலை செம்மையுறும் வகையில் அவர் தொடர்ந்து நடத்திய "நாட்டிய மாலை" எனும் கலையிரவு, எம்மைப் போன்ற நடன ஆசிரியர்களுக்கு மட்டுமன்றி இக்கலையைப் பயின்று வரும் இளம் நாட்டிய தாரகைகளுக்கும் ஓர் அற்புதக் கலை விருந்து. அதிலும் தமிழ்நாடு மற்றும் இலங்கையைச் சேர்ந்த பிரபல முன்னணி நாட்டியக் கலைஞர்களை கனடாவிற்கு வரவழைத்து, இவ்விழாவில் பங்கேற்க வைத்துப் பராட்டிக் கௌரவித்து பெருமைப்படுத்திய ஒரு பரந்த மனப்பக்குவம் கொண்ட பெருந்தகை அவர் என்றால் மிகையாகாது.

மேலும் வட அமெரிக்காவில் வருடம் தோறும் இடம்பெறும் மாபெரும் தமிழ் விழாவான ஃபெற்னாவில் முதன்முதல் நமது தாயக நடனக் கலைஞர்கள் பங்கேற்கும் வாய்ப்பு கிடைத்த பெருமை இவரையே சாரும். அவ்வகையில் எனது நாட்டியப் பள்ளியான "நிருத்தியக் கலாஞ்சலி" மாணவிகளின் நடன நிகழ்ச்சிகள் தொடர்ந்து 5 வருடம் இவ்விழாவில் இடம்பெற வைத்து வட அமெரிக்காவாழ் இந்தியத் தமிழர்களின் நன்மதிப்பினையும், பாராட்டுதல்களையும் பெறவைத்தமை எனக்கு கிடைத்த பாக்கியம்.

கடந்த 23 ஆண்டு காலமாக நட்பையும், நல்லாசியையும் எமது குடும்பத்துக்கு அள்ளி வழங்கிவரும் அவரும், அவருக்கு பக்கபலமாய்த் திகழும் அவரது பாசமிகு துணைவியார் திருமதி பவானி இராசரத்தினம் அவர்களும் குடும்பத்தினரும் பல்லாண்டு காலம் நீடூழி வாழ, எல்லாம் வல்ல ஆடல் வல்லான் நடராசப் பெருமானை வணங்கி, மலரும் நினைவாய் மனதாரப் பாராட்டி மகிழ்கிறேன். வாழ்க வளமும் நலமும் சூழ!

**நிரோதினி பரராசசிங்கம்**
கனடா

NIRO DANCE CREATIONS

**NIRO DACNE CREATIONS PRESENTS**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கவனகர் மதிக்கும் கனடா கோபுரம்
# கண்ணியசீலர்
# இராசரத்தினம் அய்யாவே

கனடா நாட்டில் எம்மைக் கவர்ந்தது "ரொறன்ரோ" நகரில் வானளாவி நிற்கும் உலகிலேயே உயரமான 'C.N. Tower' கோபுரமோ, ஏழாவது அதிசயமாக விளம்பரப் படுத்தப்பட்டுள்ள நயாகரா நீர் வீழ்ச்சியோ அல்ல!

எம் உள்ளத்தை உருக்கும் விதத்தில் எம்மைக் கவர்ந்தது தமிழ் ஈழ மக்களின் உணர்வுகளை ஒருங்கிணைத்தபடி தமிழ் ஈழக் கோபுரமாய் விளங்கும் சகோதரர் இராசரத்தினம் அய்யாதான்!... அந்தத் தியாக கோபுரத்திற்குத் தூணாக, துணையாய்ப் பல்வேறு பொறுப்புகளை ஏற்றுப் பணிபுரியும் அவரது அன்புத் தொண்டர்கள்... அறிவார்ந்த பத்திரிகையாளர்கள்... வானார்ந்த தேன்தமிழை வானொலியின் வழி வழங்குபவர்கள்... ஆடல், பாடல், நடிப்பு எனப் பல்கலையும் பயிற்றுவிக்கும் கலைத் துறையினர் உள்ளிட்ட அனைவரும் எம் வணக்கத்திற்கு உரியவர்கள்!

"மக்கள் தொண்டே மகேசன் தொண்டு!" என்பது உலக வழக்கு. "அன்பர் பணிக்கு எம்மை ஆளாக்கி விட்டுவிட்டால் இன்பநிலை தானேவந்து எய்தும் பராபரமே!" என்பது மகான் தாயுமானவர் வாக்கு.

அத்தகைய தன்னலமற்ற பொதுத்தொண்டைச் செய்து, தமிழ் இன உணர்வாளர்கள் அனைவரின் உள்ளத்திலும் அரியாசனம் அமைத்து அமர்ந்திருக்கும் உலகத் தமிழர் அய்யா இராசரத்தினம்!...

உலகில் உள்ள அத்தனை அரசியல்வாதிகளும் சமூகநல ஆர்வலர்களும் ஆன்மீகவாதிகளும் பொதுத்தொண்டு செய்யும் ஆர்வத்தில் களம் இறங்கிய பெருமக்கள்தாம்.

ஆனால், காலம் அவர்களைப் பலவாறாக மாற்றிப் புரட்டிப் போட்டுவிட்டது. சிலர் தமது தொண்டை நாளாவட்டத்தில் தொழிலாக மாற்றினார்கள். அதிகாரங்களைக் கைப்பற்றி கோடிக்கணக்கில் செல்வத்தைக் குவித்து உல்லாச வாழ்வு வாழத் தொடங்கிவிட்டார்கள்.

மற்றும் சிலர் தொண்டைத் தொழிலாக்கியது போதாதென்று முடிவில் கொள்ளையாகவே அதை மாற்றித் தமக்கும் தம் பேரன்... பேத்தி... எனத் தலைமுறைக்குமாகக் கொள்ளை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யடித்துச் சொத்து சேர்த்தார்கள். உலகம் முழுவதும் அதை இரகசியமாகப் பதுக்கி வைத்துள்ளார்கள். மற்றும் சில மூடர்கள் எதிரிகளிடம் பேரம் பேசி இனத்தைக் காட்டிக் கொடுத்துத் துரோகிகளாக மாறினார்கள்.

ஆனால் பணம்... புகழ்... அதிகாரம்... அந்தஸ்து... என எந்த ஒன்றிற்கும் அடிமையாகாமல் தொண்டைத் தொழிலாகவோ, கொள்ளையாகவோ மாற்றாமல் தூய தொண்டாகவே இன்று வரை செய்துவரும் ஈடு இணையற்ற தங்கம்தாம் எம் அன்புச் சகோதரர் இராசரத்தினம் அய்யா!...

ஈழ மக்களுக்கு மட்டுமல்ல, உலகத் தமிழர்களுக்கே ஓர் எடுத்துக் காட்டாய் வாழும் தமிழ் இனத் தொண்டர் அய்யா இராசரத்தினம் அவர்களைப் பாராட்டி மலர் வெளியிட இருக்கும் செய்தி கேட்டு உள்ளம் மலர்ந்தோம்.

கனடா வாழ் தமிழ் மக்களின் நன்றி உணர்ச்சியைக் காட்டும் அடையாளமாக அதைக் கருதி மகிழ்கின்றோம். அந்த முயற்சியைச் செய்யும் அத்தனை நல் உள்ளங்களையும் நெஞ்சார வாழ்த்துகின்றோம்.

வையகத்தோர் மட்டும் அல்ல, வானவரும் வாழ்த்தும் மாபெரும் புகழைப் பெற்று ஒளிரும் வான்தமிழ்ச் செல்வர் அய்யா இராசரத்தினம் அவர்களின் பெயரும் புகழும் தமிழின வரலாற்றில் நீங்கா இடம் பெறும்.

"நிலவரை நீள்புகழ் ஆற்றின் புலவரைப்
போற்றாது புத்தேள் உலகு" – (குறள் 234)

என்னும் தமிழ்மறையின் வழியே வான்புகழ் வள்ளுவரும் அய்யாவை வாழ்த்துகின்றார்.

அய்யாவையும் அவரது அரும் பெருந் தொண்டிற்குத் துணை நிற்கும் பண்புகளின் உறைவிடமாம் பைந்தமிழ் நாயகி பவானி இராசரத்தினம் அம்மையையும் தங்கத் தமிழ் மண்ணிலிருந்து சங்கத் தமிழ்கொண்டு வாழ்த்தும்...


சிவத்தொண்டர்
**திருக்குறள் இராம. கனகசுப்புரத்தினம்**
பதினாறு கவனகர்
கோயம்புத்தூர்
20-8-2013



– திருக்குறள் இராம. கனகசுப்புரத்தினம்
பதினாறு கவனகர் –



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



சுற்றம் சூழ, உற்றார் உறவினர்களுடன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



மனைவி, மக்கள், மருமக்களுடன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கற்பகக் காவலன்

1975ம் ஆண்டு என நினைக்கிறேன், இளைஞர்கள் வெவ்வேறு துறைகளிலே தீவிரமாக இயங்கிய காலம். அரசியல் என்றும் அபிவிருத்தி என்றும் ஆயுதப் போராட்டம் என்றும் அங்கலாய்த்து எதை செய்வதென்று திண்டாடிய காலம். அந்த காலத்தில் ஒரு வாலிபன், என் மனதுக்கு பிடித்த வாலிபன், இன்று பாராட்டு பெறும் சுப்பிரமணியம் இராசரத்தினம், வித்தியாசமான ஒருவராக செயற்பட்டார். அரசியல் என்றால் என்ன, அபிவிருத்தி என்றால் என்ன, வேறு எந்த துறை என்றால் என்ன, அந்த நேரத்துக்கு மக்களுக்கு தேவையான ஒரு நல்ல காரியத்தை செய்யும் பணியில் அவர் ஈடுபட்டார். அந்தக் கால கட்டத்தில் உலகத்தில் சீனி தட்டுப்பாடு ஏற்பட்டது. தேனீருக்கோ மற்றும் தேவைகளுக்கோ போதியளவு இனிப்பு கிடைக்காததால் மக்கள் தேனீர் குடிப்பதற்கு கிடைத்த இனிப்புகளையெல்லாம் நக்கிக் குடித்த காலம். அந்த கால கட்டத்தில் பனம்பொருள் மூலம், பதநீர் மூலம் சிறந்த தரமான பனை வெல்லம் மட்டுமல்ல சீனி உற்பத்தியைக் கூட செய்யலாம் என்ற நிலை ஏற்பட்டது. அந்த நேரத்திலே முதலாவது சீனி தொழிற்சாலை என்று சொல்லக் கூடிய அளவுக்கு தனது கிராமத்தில் அவர் ஒரு தொழிற் சாலையை நிறுவுவதில் முன்னின்று வெற்றி கண்டவர்.

இந்த வயதில் இவ்வளவு திறமையா இந்த வாலிபனுக்கு என்று நான் நினைத்து, பாராட்டி, கட்டி அணைத்து முத்தமிட்ட காலம். நினைத்ததை செய்யும் ஆற்றல் அவனுக்கு இருந்தது. செய்து முடித்தான். பின்பு சண்டிலிப்பாய் பிரதேசத்தில் பனம் பொருள் கூட்டுறவுச் சங்கங்களுக்கு ஒரு பொருத்தமான தலைவர் இல்லையே என்ற நிலை ஏற்பட்டபோது, 'நானே தலைவராக வருகிறேன்' என்று முன்வந்து சிறப்பான முறையிலே தலைமை வகித்து அந்த கூட்டுறவுச் சங்கத்தை வழி நடத்தினார். சொல்லில் மட்டுமல்ல, செயலில் மட்டுமல்ல, சாதனையில் மட்டுமல்ல, போதனையில் மட்டுமல்ல அத்தனை விடயங்களிலும் அவர் ஈடுபட்டு வெற்றி கண்டவர்.

அன்பு நிறைந்த முகமும், ஆர்வம் நிறைந்த குணமும், இன்பப் பணி புரியும் இயல்பு மனமும் கொண்ட தம்பி இராசரத்தினம் அவர்களை பல்லாண்டு காலம் பணி புரிய வாழ்த்தி அமைகிறேன்.

**க. நடராஜா**
பனம் பொருள் நிறுவனங்களின் ஸ்தாபகர்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பன்முக ஆளுமையாளர்

என் அன்புக்கும் மதிப்புக்கும் உரிய திருவாளர் சுப்பிரமணியம் இராசரத்தினம் அவர்களின் சேவை நலன் பாராட்டு மலரில் எனது சில வரிகளையும் பதிவு செய்ய வாய்ப்புக் கிடைத்ததற்கு முதலில் நன்றி.

வாழ்வில் சிலருடைய வாழ்க்கையே சில தடங்களை, பதிவு செய்கிறது. திரு. இராசரத்தினமும் எல்லோர் போலவும் சாதாரண வாழ்க்கை வாழ்ந்தார் என்று சொல்வதற் கில்லை.

எழுபத்தியேழு, எண்பதுகளில் இலங்கை சீமெந்து கூட்டுத் தாபன காங்கேசன்துறைத் தொழிற்சாலையில், நான் பயிலுனர் போசன் (Burner Trainee) ஆகப் பணி ஆரம்பித்தபோது அவர், அந்த தொழிற்சாலையின் பிரதான பகுதியின் (Kilm Section) ஒரு பொறுப்பு உத்தியோகத்தர் (Shift Incharge Section) எண்பதில் அவர் நைஜீரியா சீமெந்து தொழிற்சாலைக்குப் பதவி கிடைத்து போகும் வரை அவருடன் பணியாற்றிய காலங்கள் மகிழ்ச்சியான தருணங்கள். இன்னும் சில வருடங்கள் சேர்ந்து பணியாற்ற முடியாத வருத்தம் அப்போதே இருந்தது.

அந்த மூன்று, நான்கு வருடங்கள் தொழிற்சாலையில் உற்பத்தி கூட்டுத்திறன் அதிகரிப்பு, பரிசோதனை முயற்சிகள், தூசி கட்டுப்பாட்டு மாற்றுவழிகள் இப்படி நிறையவே இருந்ததால் சில நாட்களில் பதினாறு மணி, இருபது மணி நேரம் பணி புரிய வேண்டியிருந்தது. குறிப்பாக எரிபொருளான எண்ணெயின் அளவைக் குறைத்து முழுமையான 'Pre – CALCINETER" ஒன்றை அமைக்கும் குழுவில் முக்கிய பங்கேற்றுப் பணியாற்றியிருந்தார்.

தொடர்ந்து 'lime kiln" ஒன்றைப் புதிதாக நிர்மாணிக்க தொழிற்சாலை அதிபர் முடிவெடுத்தபோது அதனைக் கட்டிமுடிக்கும் குழுவில் பெரும் பொறுப்பேற்று செய்து முடித்தார். அது இயங்கத்தொடங்கியதும் நாம் சென்று பார்த்து மகிழ்ந்தோம். திரு. இராசரத்தினம் அவர்களின் தொழில்நுட்ப அறிவு அவரோடு பணிபுரிந்தவர்கள் மட்டுமே அறிந்தது. இவர் சிறிது காலம் சீமேந்துக் கூட்டுத்தாபனத்தில் இருந்து வடமாகாணத்துக்கான தொழிற்சாலைகளை அமைக்கும் "திட்டமிடல் அமைச்சுக்கு" மாற்றப்பட்டு யாழ் அரச பணி மனையில் வேலை செய்தார். அப்போதும் கூட பகுதி நேரமாக உயர்தர வகுப்புக்களுக்கான கற்பித்தலை (Tutions) தொடர்ந்து கொண்டுதானிருந்தார். கற்பித்தல் அவருக்குப் பிடித்தமான பணி. அதனால் தான் போலும் இங்கு கூட இளம் மாணவர்களுக்கான புதிய ஒரு பாட முறையை அறிமுகப்படுத்தி (Active Brain Centre) சிறப்பாக நடைபெறுவதாக அறிகிறேன்.

நான் அவருடன் பணி ஆரம்பித்த காலத்தில் எங்கள் அலுவலகத்திற்கு தெங்குபனம் பொருள் அபிவிருத்திச் சபையில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருந்து தலைவர் திரு. இராசரத்தினம் அவர்கட்கு என்று தலைப்பிட்டு கடிதங்கள் வரும். எழுபத்துநான்கில் தெங்கு, பனம் பொருளுக்கென்று புதிதாக ஒரு அபிவிருத்திச் சபை ஆரம்பிக்கப்பட்ட வேளை தனது ஊரான சண்டிலிப்பாய் பிரதேசத்தின் அபிவிருத்திச்சபை தலைவராக இருந்து அடுத்த தலைமையிடம் கையளிக்கும் வரை சிறப்பாக செயற்படுத்தி கையளித்ததாக அபிவிருத்திச்சபையின் மற்றைய நிர்வாக சபை அங்கத்தவர்கள் சொல்லக் கேட்டிருக்கிறேன். ஏற்கனவே நடந்து கொண்டு இருக்கும் நிறுவனங்களை நிர்வகிப்பதிலும் பார்க்க புதிதாக ஆரம்பிக்கப்படும் நிறுவனங்களை நிர்வகிப்பதில் உள்ள சிரமங்களை, சவால்களை, வென்று செயற்பட்டார் என்று அறிந்தேன். சீமெந்து தொழிற்சாலையின் அப்போதைய இறுக்கமான பணிநேரங்களுடனும் இதையெல்லாம் எப்படி செயற்படுகிறார் என்று வியந்ததுண்டு.

பொதுவாக இரவு நேரப்பணிகளின் போது நிறைய சமூக நலன் சார்ந்த விடயங்கள் பேச வாய்ப்பிருக்கும். எப்போதும் சேர்ந்து பணியாற்றும் இளையோருக்கு அறிவுரைகளும், ஆலோசனை களும், சோதனைகளும் எல்லோருக்கும் கிடைக்கும். அதனால் தான் போலும் சக உத்தியோகத்தர் பகிடியாக என்ன சொல் கிறார் உனது "குரு" என்று கேலி பண்ணுவதுண்டு. நான் அவரிடம் நிறையவே கற்றதுண்டு.

இப்படி ஒரு சிறந்த நிர்வாகி ஆக, சிறந்த கல்வி நிறுவனராக, சிறந்த ஆசானாக, சிறந்த படைப்பாளியபக பன்முகப்பட்ட தன்மையில் அவரை அடையாளம் காண்பதில் பெருமை யடைகிறேன்.

இங்கும் இரண்டுக்கும் மேற்பட்ட பணிகளுடன் தன் வாழ்க்கையைத் தொடர்ந்து கொண்டிருப்பவர். தனது பணிகளுக் கிடையிலும், கடந்த வருடத்துக்கு முன்னைய வருடம் எனது மகள் கோபிகாவின் பரத நடன அரங்கேற்றத்திற்கு மொன்றியால் வந்து சுவையான ஒரு சிறப்புரை ஆற்றியதை நன்றியோடு நினைத்துப் பார்க்கிறேன்.

அவரின் சில சிறப்பியல்புகளை மட்டும் இதில் தந்திருக்கிறேன். இதுவே எனது வாழ்த்தாகவும் இருக்குமென்று நம்புகிறேன்.

**க. தவராஜா**

மொன்றியால், கனடா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சாதனை வீரர் இராசரத்தினம்

திரு. இராசரத்தினம் அவர்களுடனான எனது தொடர்பு கனடா தமிழீழச் சங்கத்தினூடாக ஏற்பட்டிருந்தது. கனடா தமிழீழச் சங்கமானது தமிழ்ச் சமூகத்தில் ஆல விருட்சமாக வளர்ந்துள்ள ஒரு சமூக அமைப்பாகும். அச்சங்கத்தின் நிர்வாகக் கட்டமைப்பின் வளர்ச்சியில் ஆரம்ப காலங்களில் பங்கெடுத்துக் கொண்ட ஒரு சிலரில் திரு. இராசரத்திதினம் அவர்களும் ஒருவராவார். இவர் போன்றோரின் திறமையான, கடினமான உழைப்பு பெருந்திரளாகக் கனடாவிற்கு வந்த ஈழத் தமிழர்களின் குடியமர்விற்குப் பேருதவியாக அமைந்தது. 1990ஆம் ஆண்டு டான்∴போர்த் வீதியில் ஒரு ஊழியருடனும் 46, 000 கனடிய டொலர் அரச நிதி உதவியுடனும் இருந்த கனடா தமிழீழச் சங்கத்தில் திரு. இராசரத்தினம் நிதித்துறை மற்றும் கல்வித்துறை என்பனவற்றைப் பொறுப்பேற்றுக் கொண்டதனை அடுத்து பாரிய வளர்ச்சியைக் காணக் கூடியதாகவிருந்தது.

அதே ஆண்டில் டான்∴போர்த் வீதி அலுவலகத்தில் குடியமர்வுச் சேவை, புதிய குடிவரவாளருக்கான LINC எனும் ஆங்கில வகுப்புக்கள் ஆரம்பிக்க வழிவகுத்து 90,000 டொலர் அரச நிதி உதவியைப் பெற்றெடுக்க உதவினார். 1991ல் லான்ஸ் டவுணிலும், மிசிசாகாவிலும் கிளைகளைத் திறந்து, வேலை வாய்ப்புப் பெற்றுக் கொடுப்பதற்கான நிதி, ரொறன்ரோ நகர நிதி உதவி, பெண்கள் கருத்தரங்குக்கான நிதி என, 107 மில்லியன் டொலர் நிதி உதவி பெறக் காலாக இருந்தார். 1992ல் இத்தொகை 1.9 மில்லியன் டொலராக உயர்வடைந்தது.

1993ல் இவரது திட்டமிடலின் கீழ் கனடா தமிழீழச் சங்கத்திற்கென சொந்தக் கட்டடம் கட்டுவதற்கான முயற்சிகள் முன்னெ டுக்கப்பட்டு அன்றைய ஒன்ராறியோ மாநில அரசின் உதவித் தொகையாக 283, 000 டொலர் பெறப்பட்டது. 1994ல் குடியமர்வோருக்கான LINC ஆங்கில வகுப்புக்கள் ஜேன் - ∴பின்ச் சந்திப்புக்கு அருகாமையிலும் ஆரம்பிக்கப்பட்டதுடன் நான்கு ஆண்டுகளில் கனடா தமிழீழச் சங்கத்திற்கென ஆறு அலுவலகங்கள் ரொறன்ரோ பெரும்பாகத்தில் புதிய தமிழ் குடிவரவாளருக்குச் சேவை செய்யவென அமைக்கப் பட்டிருந்தன.

இது மட்டுமன்றி 1991ல் தமிழ்க் கலை, தொழில்நுட்பக் கல்லூரியின் கிளைகளும் கனடா தமிழீழச் சங்கத்துடன் இணைந்து தமிழர்க்குச் சேவை செய்ய உறுதுணையாக இருந்தார். கனடா வாழ் பல்லின மக்களும், கலை, பண்பாடு, வரலாறு, வாழ்வியல் முறை என்பனவற்றை மற்றைய இனத்தவரும் அறிந்து கொள்ளும் வண்ணம் ஆண்டு தோறும் காலை 10 மணி முதல் இரவு 11 மணி வரை தங்கள் தங்கள் நாட்டின் தலைநகரின் பெயர் கொண்ட அரங்குகளை அமைத்து விழாவினை நடத்துவது வழமை. தமிழீழச் சங்கமும் "திருகோணமலை" வாடியை அமைத்து 1992ஆம் ஆண்டு முதல் நடத்தி, ஆண்டு தோறும் பல விருதுகளைப் பெற்று வந்தது குறிப்பிடத் தக்கது. இவற்றிற்கு காரணமாயிருந்த திரு. இராசரத்தினம் அவர்களுக்கு எனது பாராட்டுக்களும் வாழ்த்துக்களும்!

**சாள்ஸ் தேவசகாயம்**
கனடா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தாய் மொழியை மதிக்கும் தமிழன்

திரு. சுப்பிரமணியம் இராசரத்தினம் அவர்களைப் பாடசாலைப் பருவத்திலிருந்தே நான் அறிவேன். அவர் பல பொதுத்துறைகளில் ஈடுபட்டு தமிழ் மக்களுக்குச் சேவையாற்றிவருகிறார். அந்தவரிசையில் கனடா தமிழீழச் சங்கம், தமிழ்கலை, தொழில்நுட்பக் கல்லூரி போன்றவை குறிப்பிடத்தக்கனவாகும். இக் கல்லூரியில் தமிழை மாணவர்களுக்கு கற்பித்துத் தமிழுக்குப் பெரிய தொண்டாற்றினார். தமிழின் மீதும் தாய்மண்ணின் மீதும் அளவற்ற மதிப்பும் பற்றுதலும் கொண்டவர் அவர். தாய்மொழியில் கதைப்பது அநாகரீகம் என்றெண்ணி ஆங்கிலத்தில் உரையாடும் மக்கள் மத்தியில் இப்படியும் உறுதியான கொள்கையுள்ளவர்கள் வாழ்வது நாம் செய்த பாக்கியம்தான்.

அவர் ஈழத்தில் வாழ்ந்த காலத்தில் "பனை அபிவிருத்திச் சபை"யின் உபதலைவராகக் கடமையாற்றினார். அவ்வேளை தமிழ் அறிஞர்களின் புத்தகங்களையும், தமிழரின் சரித்திரம் கூறும் ஆராய்ச்சி நூல்களையும் தேடிப்பெற்று வாசித்துவருவார். ஓய்வு நேரங்களில் அவர் தன் நண்பர்களுடன் அந்த மண்ணில் நடைபெறும் அரசியல் கேலிக்கூத்துகளைக் கண்டித்து விமர்ச்சிப்பார். தமிழின்மேல் அவர் கொண்ட ஆர்வத்தை கண்ணுற்ற நாங்கள் அவருடன் இணைந்து சில நாடகங்களைத் தயாரித்து மேடையேற்றினோம். பெரும் வரவேற்பைப் பெற்ற சொக்கனின் "சிங்ககிரிக் காவலன்" என்னும் நாடகத்தில் அல்லி எனும் பெண் பாத்திரத்தில் அவர் நடித்தார். அவை பெரும் வரவேற்பைப் பெற்றதுடன் வடமாகாணத்தில் பல இடங்களிலும் மேடையேற்றப்பட்டன.

இவர் மனதில் பட்ட விடயங்களை மறைத்துவையாமல் நேரே கூறிவிடும் பழக்கம் உடையவர். பல விடயங்களைத் துணிந்து மேடைகளிலும் கூறியுள்ளார். தமிழ் மக்கள் தமது உரிமைகளைப் பெற்றுத் தலை நிமிர்ந்து வாழவேண்டும் என்ற உறுதியான கொள்கை யுடையவர். அந்த நிலைப்பாட்டுடன் தமிழனின் பெருமைகூறும், பல சான்றுகளை உள்ளடக்கிய "ஈழ வரலாற்றில் ஒரு நோக்கு – தமிழீழம் – நாடும் அரசும்" என்னும் ஓர் அரிய பொக்கிசத்தை எழுதி 1995ல் கனடாவில் வெளியிட்டார். பெரும் வரவேற்புப் பெற்ற இந்தப் புத்தகம் இவர் தமிழின்மேற் கொண்ட பற்றுதலையும், இவரின் ஆழமான அறிவையும் உலகுக்கு உணர்த்தியது. தமிழ்நிலம் எப்படிப் படிப் படியாக எதிரியால் பறிக்கப் பட்டது என்பதையும், எங்கெங்கெல்லாம் தமிழன் வாழ்ந்திருக் கின்றான் என்பதையும் இதன்மூலம் அனைவரும் அறியமுடிந்தது.

விழாநாயகன் திரு. இராசரத்தினம் அவர்கள் பல்லாண்டு காலம் நலமாக வாழவேண்டும். இன்னும் பலமடங்கு தமிழுக்கும், தமிழருக் கும் சேவை செய்யவேண்டும் என்று மனதார வாழ்த்துகின்றேன்.

**த. ஜெகன்**

கனடா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அன்புள்ள குஞ்சண்ணா

சண்டிலிப்பாயைப் பிறப்பிடமாகக் கொண்ட அன்புக்கும் மதிப்புக்கும் உரிய உடன் பிறவா "குஞ்சண்ணா" என்று செல்லமாக அழைக்கப்படும் திரு. சுப்பிரமணியம் இராச ரத்தினம் அவர்கள் எமது இளம் வயதில் தந்த கல்வி இன்று எங்களுக்கு உதவுவதுபோல, இன்று அவர் எடுக்கும் முயற்சி ஒவ்வொன்றும் என்றோ ஒருநாள் எம் தலைமுறைக்கு உதவும். எத்தனையோ மாணவர்களுக்கு இவர் இலவசமாக படிப்பித்து எல்லாரும் திறமையாக முன்னேறி வந்திருக்கிறார்கள். எடுத்துகாட்டாக நானும் ஒரு ஆசிரியராக கடந்த 23 ஆண்டு களாக கடமை புரிகின்றேன்.

அவர் சமூகசேவை, அரசியல், கல்வி, கலாசாரம் முதலியவற்றை பொறுப்பேற்று இருக்கிறார். எம் மண்ணின் பணியே மகேசன் பணியாக நினைத்து அரும்பாடுபட்டு சேவயாற்றி வருகிறார். இவரின் முயற்சிக்கு அவர் எழுதிய "பண்பாடு – வேரும் விழுதும்" என்ற நூல் எடுத்துகாட்டாக இருக்கிறது. மொழி இனம் நாடு என்ற மண்ணின் தொடர்பை அறுக்காமல் அங்கு இருந்து கொண்டும் எம் மண்ணிற்காக பல உதவிகள் செய்து கொண்டிருக்கிறார். "நாடு என்ன செய்தது எனக் கேள்விகள் கேட்பாய் உனக்கு – நீ என்ன செய்தாய் அதற்கு" என்ற பாடலை முறியடித்துவிட்டார் குஞ்சண்ணா.

இவரின் பணி போல் ஒவ்வொருவரும் நினைத்துச் செயற் பட்டால், எம் மண்ணையும் இனத்தையும் இலகுவில் காப்பாற்ற முடியும் என்ற அசைக்கமுடியாத நம்பிக்கை எனக்கு உண்டு.

அவர் பணி மேலும் வளர வாழ்த்துக் கூறும்

அன்பு உடன்பிறவா தங்கை
**திருமதி வி. பத்மநாதன்**
இங்கிலாந்து

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொது வாழ்வில் திளைத்தவர்!

சமுதாயத்துக்காக முழுமனதுடனும் மகிழ்சியுடன் உழைக்கும் ஒருவர் பலராலும் நேசிக்கப்படுவது இயல்பு. சுயநலனே அனைத்துமாகிவிட்ட இன்றைய மனித சமுதாயத்தில் மற்றவர்களுக்காகப் பாடுபடுவது என்பது அரிதிலும் அரிதாகிவிட்டது. பொன்னும் பொருளும் சம்பாதிப்பது மட்டுந்தான் மகிழ்ச்சி என்ற பொது மனப்பாங்கைக் கடந்து, "மற்றவர்களுக்கு உதவுவதே மகிழ்ச்சி" என்ற நம்பிக்கையோடு செயற்படுபவர்கள் இன்று ஒரு சிலரே. இவ்விதமாக, எந்தவித எதிர்பார்ப்புமின்றித் தன்னால் முடிந்த சேவைகளை அன்று தொட்டு இன்றுவரை மற்றவர்களுக்குச் செய்கின்ற நல்லெண்ணம் கொண்ட சிறந்த மனிதராக வாழ்ந்து வரும் திரு. சுப்பிரமணியம் இராசரத்தினம் அவர்களுடன் 1976ம் ஆண்டு தொடக்கம் நெருங்கிப் பழகும் சந்தர்ப்பம் எனக்குக் கிட்டியது.

திரு. இராசரத்தினம் அவர்களது பல்வேறுபட்ட பொதுப் பணிகளுக்காக, அவரை வாழும் காலத்தில் இன்று சிறப்பிக்கின்றனர். அவர் குறிப்பிட்ட ஒரு அரசியல் சூழலைச் சார்ந்திருந்த போதும், அவரது பொதுப்பணிகள் அதனைக் கடந்து நின்றவை, தனித்துவமானவை, சமூகப் பார்வை மிக்கவை. இவற்றுள் 1970 களில் இலங்கையில் பனை அபிவிருத்தித் தொழிற்துறை சார்ந்த பங்களிப்பு, கனடா நாட்டுக்குப் புலம் பெயர்ந்த பின்னரான தமிழ்க் கல்வித்துறை சார்ந்த பங்களிப்பு என்பன முக்கியமானவை.

காங்கேசந்துறை சீமெந்துத் தொழிற்சாலையில் பணியாற்றிய காலத்தில், வேலை–வீடு என்று மட்டும் இவர் இருந்து விடவில்லை. 1970களில் யாழ் விவசாயம் மேலோங்கிய காலத்தில் பனை சார்ந்த தொழில்கள் செழிப்புற உழைத்தவர். பனை உற்பத்தியைக் கைத்தொழிலாக மாற்றியதில் திரு. இராசரத்தினம் அவர்களின் பங்கு அளப்பரியது. சீனித் தொழிற்சாலை, பனம் கட்டி தொழிற்சாலை என்பன இவரால் முன்னின்று உருவாக்கப்பட்டவை. பனை சார்ந்த கைவினைப் பொருட்கள் செய்யும் கைத்தொழில் பேட்டைகள் கூட இவரால் உருவாக்கப்பட்டவை. முழு நாட்டினதும் உற்பத்தி, சுய உழைப்பு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொடர்பான சமூக விருத்திக்கு இது ஊக்கமும் ஆக்கமும் வழங்கியது.

பொதுப்பணி ஆர்வத்தையும் தனது பள்ளித் தோழன் மூலம் தனக்குக் கிடைத்த அரசியல் தொடர்பையும் தன் சுயநலனுக்கு பயன்படுத்தாது, அவற்றை மக்களுக்குப் பயன்படுத்தியதன் மூலம் திரு. இராசரத்தினம் அவர்கள் மற்றவர்களில் இருந்து தன்னை வேறுபடுத்திக் கொண்டார். ஏழை எளிய மக்களதும், தாழ்த்தப்பட்ட மக்களதும் வாழ்விற்காகத் தன்னால் ஆன அனைத்தையும் செய்தார். எனது அறிவுக்கெட்டியவரை வசதி குறைந்த மாணவர்களுக்குத் தனது சொந்தப் பணத்தில் உதவிகள் பல செய்தார். மற்றவர்கள் அரசியல் செல்வாக்கைச் சுயநலனுக்கும் பணம் சம்பாதிக்கவும் பயன்படுத்திய போது, அதை அடிநிலையில் உள்ள மக்களுக்கு உதவ இவர் பயன்படுத்தினார்.

திரு. இராசரத்தினம் அவர்கள் 1980ம் ஆண்டு தொழில் நிமித்தமாக (Chief Burner) நைஜீரியா பயணமானார் (1980-1986). தனது வாழ்நாளில் இவர் இந்த 6 ஆண்டுகளில்தான் தன் குடும்பத்திற்காக உழைத்தவர். இவர் தன் இளமைக் காலத்தையும் பின்னய காலத்தையும் சமுதாயத்திற்காகவே அர்ப்பணித்தார்.

இதில் குறிப்பாக கனடாவில் இவர் தமிழ் பாடசாலைகளுக்கு அதிபராக இருந்த காலத்தை யாராலும் மறக்கமுடியாது. ஆங்கிலம் பேசும் நாட்டில் எமது இளைய சமுதாயம் தமிழ் பேச, படிக்க, எழுத முடிகின்றதென்றால் அதற்கான திரு. இராசரத்தினம் அவர்களது பங்கு மிகப் பெரியது. இதில் எனது பிள்ளைகளும் அடக்கம் என்பதைப் பெருமையுடன் குறிப்பிட விரும்புகின்றேன்.

இவரது பலரக பணி தொடர நாம் எல்லோரும் அவருக்குப் பக்க துணையாக இருக்கவேண்டும். இது ஒன்றுதான் கனடாவாழ் தமிழ் சமூகம் அவருக்குச் செய்யும் முக்கிய பங்களிப்பாகவும் நன்றிக் கடனாகவும் இருக்க முடியும்.

**பூ. பகீரதன்**
கனடா / நைஜீரியா.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வளமுடன் வாழ்க!

திரு. சுப்பிரமணியம் இராசரத்தினம்,
தலைவர்,
தமிழ்க் கலை பண்பாட்டுக் கழகம்,
கனடா.

அன்புடையீர், வணக்கம்.

"தமிழீழம் நாடும் அரசும்" – தங்களால் எழுதப்பட்ட "ஈழ வரலாற்றில் ஒரு நோக்கு" என்னும் நூலைப் படித்தேன். உளம் மகிழ்ந்தேன்.

அரிய வரலாற்றுப் படைப்பு. கடும் உழைப்பின் அறுவடை. தமிழ் மக்களுக்கு காலத்தின் கட்டாயம் அறிந்து வெளிவந்த கருவூலம். தமிழ் மக்களின் வரலாறு தெரியாதவர்களுக்கு ஒரு வரப்பிரசாதம். தமிழ் மக்கள் நன்றி உணர்வுடன் உங்களை வாழ்த்த வேண்டும். பாராட்ட வேண்டும்.

சத்திய நிகழ்வுகள் சாகக்கூடாது. கண்ணீர் விட்டு நிற்கும் தமிழன்னைக்கு தாங்கள் அளித்த காணிக்கை.

வாழ்க! வளமுடன்!

இவ்வண்ணம்
தங்கள் அன்புள்ள
**செல்லையா இராசதுரை**
21-7-1998

## வாழ்த்துமக்கே அன்ப!

பண்பாடு வேரும்
விழுதும் படித்துணர்ந்தேன்
நண்போடு நெஞ்சில்
நடவு செய்தேன்! கண்போடும்
பக்கம் வரிகள்
பதிவு செய்தேன் ஆராய்ந்தேன்
சிக்கலெலாம் கண்டேன் தெளிந்து

தெளிந்து தவஞ்செய்தால்
சிக்கலெலாம் தீரும்
தெளிந்து நினைவுஓடி
நிற்கும் ஒளிந்திருக்கும்
ஆற்றல் எழுப்பும்
அனுவறிவைக் கைக்கொண்டால்
காற்றில் உணர்ந்திடலாம் காண்

காணும் கருத்துக்கள்
கற்கண்டு கண்ஆடி
பூணாக வேவிளங்கும்
பொன்னாணி நானும்
மயக்கம் அறியாமை!
வாழ்த்துமக்கே அன்ப
பயக்கும் விரைவில் பயன்

அன்புடன்
**புலவர் அ. பொன்னையன்**
சிங்கப்பூர்
10-09-2011

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மண் பயனுற வேண்டும்!

சமூகம் என்பது பல மனிதர்களின் சமுத்திரப் பெருவெளி. ஒரு மனிதன் அதில் ஒரு சிறுதுளி.

மனிதன் தான் வாழும் சமூகத்திற்கென உழைத்தல், எதிர்காலச் சந்ததிக்குத் தொடக்கப் புள்ளிகளின் தொடர்ச்சியைத் தொடரச் செய்தல் போன்றவை இச்சமூகத்தில் வாழக் கிடைத்தமைக்கென அவன் செலுத்தும் நியாயமான வாடகை. இதனை ஒரு கட்டணமாகக் கொள்ளலாம்! இந்த உண்மையின் தாற்பரியத்தை உணர்ந்தவராய், தமக்கென வாழ்வதுடன், தாம் வாழும் சமூகத்திற்கெனவும் வாழ்பவர் மிகச் சிலரே.

தமிழ் மொழிக்கெனவும், தமிழ் இனத்திற்கெனவும், தமிழ்ப் பண்பாட்டுக்கெனவும் வாழ்வின் குறிப்பிட்ட பகுதியை அர்ப்பணித்த இச்சிறுபான்மையினருள் திரு. சுப்பிரமணியம் இராசரத்தினம் அவர்களும் ஒருவர் என்பது பெருமைக்குரியது.

தமிழீழச் சங்கம், தமிழ்க் கலை, தொழில்நுட்பக் கல்லூரி, நாடுகடந்த தமிழீழ அரசு, முனையும் மூளை மையம் போன்ற பல அமைப்புக்கள் ஊடாக, கனடாவாழ் தமிழ்ச் சமூகத்தினருக்கு அவர் ஆற்றிவந்த சேவைகள் மதிக்கப்பட வேண்டும்.

இவ்வாறான பொதுப் பணிகளில் அவர் ஈடுபட்ட வேளைகளில் அவர் எதிர்கொண்ட சவால்களை, நானும் இந்த சமூகத்தின் அங்கம் என்பதால் இலகுவாக உணரக்கூடியதாக இருந்தது. அவற்றை யெல்லாம் சமாளித்து வெற்றிகொள்ளக் காரணமாக இருந்தவற்றுள் பிரதானமானது, அவரிடம் இயல்பாகவே காணப்படும் மனவுறுதி. இதனையே–

> வினைத்திட்பம் என்பது ஒருவன் மனத்திட்பம்
> மற்றைய எல்லாம் பிற – (குறள்: 661)

என வள்ளுவர் சொன்னார்.

மனதில் உறுதியும், வாக்கினிலே இனிமையும், நினைவு நல்லதும் கொண்ட திரு. இராசரத்தினம் அவர்கள் நெருங்கின கைப்பட்டன. தொடர்ந்தும் கைப்பட வேண்டும்.

மண் அவரால் இன்னும் பயனுற வேண்டும்
மாநிலம் மேலும் தழைத்திட வேண்டும்!

வாழ்த்துக்கள்!

**ராஜா மகேந்திரன்**
"விளம்பரம்" – பதிப்பாசிரியர்

**Vlambaram Publications Inc.**
GTA SQUARE
5215 Finch Avenue E., #201, Toronto, ON M1S 0C2, Canada
Tel. (416) 282-8059 Fax. (416) 282-4978
E-mail: vlambaram@sympatico.ca Web: www.vlambaram.com/www.tamilvanakkam.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமூக சேவையாளர்

மதிப்புக்குரிய திரு. சுப்பிரமணியம் இராசரத்தினம் அவர்கள் இலங்கையில் வாழ்ந்த காலங்களில் ஒரு பொதுவுடமைச் சிந்தைனாவாதியாக அறியப்பட்டவர். அவரது சமூகநலன் சார்ந்த செயற்பாடுகள் அதற்குச் சான்றாதாரங்களாக விளங்கின.

அவர் பிறந்து வளர்ந்த சூழல், சமதர்ம சிந்தனை மிக்க உறவினர்களது வழிநடத்தல், முற்போக்குக் குணாம்சங்கள் கொண்ட நண்பர் குழாம் போன்ற பல பின்னணிக் காரணிகள் அவரது சிந்தனைகளிலும் செயற்பாடுகளிலும் பொதுவுடமை விதையினை விதைத்திருக்கின்றன.

இதனால்தான் பஞ்சப்பட்டவர்களுக்கு மனம் இரங்கும் சுபாவமும், பாதகம் செய்வோரைக் கண்டால் பயங்கொள்ளாத் துணிச்சலும், நீதிக்காகப் போராடும் நெறியும் இவரது இரத்தத்தில் இரண்டறக் கலந்துவிட்ட இயல்புகளாயின.

எமது சமூகத்தின் சொத்தாகக் கருதக்கூடிய தகைமைகளும் திறமைகளும்கொண்ட திரு. இராசரத்தினம் அவர்களது ஆற்றல்களும் சேவைகளும் மென்மேலும் சிறந்து மேலோங்கி, அவர் நீண்டகாலம் வாழவேண்டுமென நான் மனமார வாழ்த்துகிறேன்.

**எஸ். சிவராஜா** B.A.M.A.(SOL)
திருமணப்பதிவாளர், கனடா.

# ஒளிர்விட வாழ்த்துக்கள்

புலம்பெயர்ந்த கனடிய மண்ணில் பொதுவாழ்வில் பலர் வருகிறார்கள். கால ஓட்டத்தில் காணாமல் போகிறார்கள். திரு. இராசரத்தினம் அவர்கள் ஓர் எழுத்தாளன், ஒரு கல்வியாளன், ஒரு சமூகப் பார்வையாளன் எனப் பல முகங்கள் கொண்டவர். இதனால் அவர் காணாமல் போவதற்கு வாய்ப்புக்கள் இல்லை.

அடுத்த வீட்டில் இருப்பவர்களுக்கே சிலரைத் தெரிவது அரிது. ஏனெனில் அவர்களுக்குச் சமூகப் பார்வை இருப்பதில்லை. திரு. இராசரத்தினம் அவர்களைத் தமிழ் நாட்டிலும், மலேசியாவிலும் கூடப் பலர் தெரிந்து வைத்திருக்கிறார்கள் என்பதை நன்கறிவேன்.

நல்லுலகில் என்றும் இராசரத்தினம் அவர்கள் ஒளிர்விட வாழ்த்துக்கள்!



என்றும் உங்கள்
தமிழன் வழிகாட்டி
**செந்தி**

ATHAVAN PUBLICATIONS INC.
Tamils' Guide Publishers
'Our Business is to promote you in Business'

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "வரப்புயர......!"

"வரப்புயர நீருயரும்
நீருயர நெல்லுயரும்
நெல்லுயரக் குடியுயரும்
குடியுயரக் கோன் உயர்வான்"

குஞ்சன் அண்ணா என அன்புடனும் பாசத்துடனும் எம் பள்ளிப்பருவக் காலத்தில் அழைக்கப்பட்ட எங்கள் சுப்பிரமணியம் இராசரத்தினம் அவர்களின் விழா மலருக்கு எனது வாழ்த்துச் செய்தியை எழுத முற்பட்ட பொழுது "வரப்புயர" என்ற ஒரு சொல்லினால் மட்டும் குலோத்துங்க சோழ மன்னனை வாழ்த்திய ஔவையாரின் இந்த வரிகள் தான் என் ஞாபகத்திற்கு வந்தன.

ஒருவனுக்கு அளிக்கப்படும் உணவு அவனது அந்த நேரப்பசியை மட்டும் போக்கும்! போரினால் சிதையுண்ட ஒருவனுக்கு கட்டிக் கொடுக்கும் ஒரு வீடு அவனது குடும்பத்தை நிம்மதியாக வாழ வைக்கும்! ஆனால் அவனுக்கு இலவசமாக அளிக்கப்படும் கல்வியால் அவனது சமூகம், ஊர், மேலாக அவனது நாடே வளம்பெறும் அவ்வாறு ஒரு வரப்புயரக் கட்டும் முயற்சியைத் தான் எங்கள் குஞ்சன் அண்ணா தனது இளமைப் பராயத்தில் இருந்து செய்து வந்திருக்கிறார்.

தனது ஓய்வு நேரத்தை வீணாக்காது மாணவர்களுக்கு இலவசக் கல்வி, இளையோர் படிப்பகத்தின் உருவாக்கம் என்று சிறிது சிறிதாக அவர் கட்டிய வரம்புகள் இன்று பெரிய அணைகளாக உயர்ந்து இருப்பதின் பலனையும் நன்றியறிதலையும் மகிழ்ச்சியையும் அவருக்கே சமர்ப்பணம் செய்ய நாம் கடமைப் பட்டுள்ளோம்.

அவரின் அந்த இயல்பு – அவர் சண்டிலிப்பாயில் போட்ட வித்து இந்த 20 வருடகாலத்தில் புலம்பெயர்ந்த நாட்டில் கல்வி கற்பித்தலிலும் சமூக சேவைகளிலும் அவர் பெரிய விருட்சமாக வளர்வதற்கு காரணமாய் அமைந்திருக்கின்றது. மீண்டும் வயரப்புயரக் கட்டும் முயற்சி தான். இந்த தமிழ் அணை நிச்சயம் நயாகரா அணையை விட ஒரு நாள் உயரமாகும்.

"அடுத்த தொரு தரப்படுத்தல்
ஐரோப்பாவில் என்றால்
அது எம் தமிழ் பிள்ளைகளால் தான்"

என அண்மையில் நான் படித்த ஒரு கவிதை வரி கனடாவிலும் நிஜம் ஆகும் என்றால் எங்கள் குஞ்சன் அண்ணா போன்றோரின் உழைப்பே காரணம் ஆகும்.

இந்தக் கணினி உலகத்தில் பொருளாதாரத் தேடலை மட்டும் குறிக்கோளாகக் கொண்டு – சமூக அந்தஸ்தாக கொண்டு கற்பிக்கப்படும் கல்வியில் எம் சமூகம் நலிந்து விடாமல் எங்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கலாச்சார விழுமியங்கள் சிதைந்து விடாமல் அவர் எழுதிய "பண்பாடு - வேரும் விழுது" என்ற நூலை வாசித்த பொழுது அவருக்கு சமூகத்தின் மேலுள்ள அக்கறையை எண்ணிப் பார்த்தேன். எங்கள் சண்டிலிப்பாய் குஞ்சண்ணா இன்னமும் மாறவேயில்லை.

எங்கள் இளம் வயதில் எமக்கு அவர் தந்த கல்வி இன்று எங்களுக்கு உதவுவது போல இன்று அவர் எடுக்கும் நடவடிக்கைகள் நிச்சயம் என்றோ ஒருநாள் எங்கள் சந்ததிக்கு உதவும் என்ற அசைக்க முடியாத நம்பிக்கை என்றும் உண்டு.

வரம்புகளை தொடர்ந்து உயரக் கட்டுங்கள். உங்களுக்கு பக்கத் துணையாக தூர் வாரவும் மண்ணை சுமந்து வந்து கொட்டவும் நாங்கள் இருக்கின்றோம். மேலாக உங்களை ஆரோக்கியத் துடன் வைத்திருக்க எங்கள் சீரணி அம்மன் இருக்கின்றாள்.

உங்கள் பணி என்றும் தொடரட்டும்.

அன்பு நிறைந்த ஆசிகளுடன்
**இராசையா தேவராஜா**
இங்கிலாந்து

## ஊர்ப்பற்று

ஈழத் தமிழர்களின் கலாச்சாரத்தின் பிறப்பிடமும் கல்வியும் வனப்பும் யாழ் குடாநாட்டில் இயற்கை வளமும் உழைப்பின் உயர்ச் சியும் சைவமும், செந்தமிழும் கொண்ட சண்டிலிப்பாய் திரு. இராசரத்தினம் அவர்களது தந்தையின் ஊர்.

இவர் தனது கல்வியை அளவெட்டியில் உள்ள அருணோதயாக் கல்லூரியிலும், ஸ்கந்தவரோதயாகக் கல்லூரியிலும் பயின்றார். இவர் அருணோதயாக் கல்லூரியில் கல்வி கற்கும் காலத்தில் தனது கிராமத்திலுள்ள மாணவர்களுக்கும், அயற்கிராமங்களிலுள்ள மாணவர்களுக்கும் எந்தவிதமான வேறுபாடுமின்றி கல்வியைக் கற்றுக் கொடுத்தார். இது இவருடைய முதற்பணி என்று சொல்லலாம். மேலும் இவர் ஊரில் செய்துவந்த கல்விச்சேவையை புலம்பெயர்ந்த கனடா நாட்டிலும் செய்து வந்தார். தொழில்நுட்பக் கல்லூரி ஒன்றை ஆரம்பித்து பல மாணவர்களுக்கு அளப்பரிய கல்விச் சேவையை ஆற்றி வந்தார்.

தொடர்ந்து இச்சேவையை பல நடைமுறைச் சிக்கலால் இந்த நிறுவனத்தின் மூலம் செய்துவர முடியாது போக Active Brain Center என்ற நிறுவனத்தை நிறுவி அதன் மூலம் பல்வின மாணவர்களுக்கு அரும்பெரும் கல்விச் சேவையைத் தொடர்ந்து ஆற்றி வருகிறார்.

வாழ்க வளர்க!
**வே. பத்மநாதன்**
கனடா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அயராத் தொண்டின் அடையாளம் இராசரத்தினம்

கனடாத் தமிழ்ச் சமூகத்தின் கடந்த 25 ஆண்டுகால வரலாறு, சமூக ஈடுபாடு கொண்ட பல பெரியோர்களைச் சந்தித்திருக்கின்றது. அத்தகைய பெரியோர்களின் வரிசையில் திரு. சுப்பிரமணியம் இராசரத்தினம் அவர்களும் திகழ்கின்றார். இந்நிலையில் சமூகப்பெரியோர் பலரும் இணைந்து இராசரத்தினம் அவர்களின் சேவை நலனைப் போற்றி முன்னெடுக்கும் இந்த மதிப்பளிப்பு நிகழ்வு முக்கியத்துவம் பெறுகின்றது.

தாய்வீடு பத்திரிகையின் எழுத்தாளர் குழுமத்தில் ஒருவராகவும் திகழும் திரு. இராசரத்தினம் அவர்களின் சேவைப்பரப்பு பரந்து விரிந்தது. குறித்த ஒரு துறை என்றில்லாது, சமூகம் சார்ந்த பல தேவைகளினூடாகவும் தன் சேவைத்தளத்தை விரிவாக்கிச் செயற்பட்டிருந்தார்.

அயராத சமூகப்பணிகளுக்கு மத்தியில், பயன்மிக்க இரு நூல்களை எழுதி வெளியிட்டிருப்பதுடன் தாய்வீடு இதழிலும் அவ்வப்போது சில கட்டுரைகளை எழுதி வந்துள்ளார். சமூகம் மீது இவர் கொண்டுள்ள ஈடுபாடும் தெளிவான பார்வையும் ஆக்கபூர்வமான பல எழுத்தாக்கங்களுக்குத் தொடர்ந்து வித்திடவல்லன.


கல்வி, கலை, பண்பாடு ஆகிய துறைகளில் கடந்த பல ஆண்டுகளில் இவர் ஆற்றிய சேவைகள் அளப்பரியன. இன்று பலதுறைகளில் எம்மத்தியில் பணியாற்றிக்கொண்டிருக்கும் பலரையும் அந்தந்தத் துறைகளுக்குள் அழைத்து வந்து அடையாளம் காட்டியோருள் இவர் முக்கியமானவர்.

வேறுபட்ட பண்பாட்டு பௌதீகச் சூழலில் புதிதாகக் குடியேறும் ஓர் இனம் தொடக்க காலத்தில் பெரும் சவால்களைச் சந்திக்கும். கனடா போன்ற புதிய குடியேற்றப்புலங்களில் பெரும் போராட்டத்தோடு வாழ்வை அமைத்துக்கொண்ட எம் சமூகத்தில் திரு. இராசரத்தினம் போன்றோரின் செயற்பாடுகள் பெறுமதி மிக்கவை.

இவர் ஆற்றிய சேவைகளைப் பாராட்டி வாழ்த்துகின்றது தாய்வீடு.

தாய்வீடு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



திரு. சுப்பிரமணியம் இராசரத்தினம் அவர்களது சேவைகளைப் பாராட்டி முன்னெடுக்கப்பட்ட இந்த மதிப்பளிப்பு விழாவுக்குத் துணை நின்ற அனைவருக்கும் எமது மனம் கனிந்த நன்றி!

விழா அமைப்புக்குழு –

திரு. பொ. கனகசபாபதி
திரு. ம.செ. அலெக்சாந்தர்
திரு. வி. கந்தவனம்
திரு. ம. ஜேசுதாசன்
கலாநிதி பார்வதி கந்தசாமி
திரு. க. துரைசிங்கம்
திரு. வ. திவ்வியராஜன்
திரு. சீ. ஞானேஸ்வரன்
திரு. க. சீனிவாசகம்
திரு. சீ. மதிவாசன்
திரு. த. சிவபாலு
திரு. பொ. விவேகானந்தன்
திரு. க. திருமாவளவன்
திரு. க. நவம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழிய நீ பல்லாண்டு!

சிறுவிழியில் ஒளிக்கீற்று; இதழ்க்கடையில் குறுமுறுவல்
தேனூறும் பேச்சில் ஈ மொய்க்கும்
சிந்தையில் தொலைநோக்கு; யார்க்கும் குடியல்லன்
விந்தை மனிதர் வீண் பேச்சுக்கஞ்சான்; பட்டங்கள்
இல்லாப் பேராசான் மொத்தத்தில் முழுமை; என்
முன்னோர்கள் சுவடுபற்றி இவன் நடந்த பாதையெல்லாம்
பொன்பூ சொரிகிறது
எட்ட இருந்து இவன் தொட்ட சிகரங்கள் எட்டி
மனம் முட்டி மகிழ்கின்ற கவிஞன் நான்.
வாழ்த்துதற்கு வயதில்லை
இருந்தும்
என் முன்னோரை மனதிருத்தி வாழ்த்துகிறேன்
வாழிய நீ பல்லாண்டு!

- திருமாவளவன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org